## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.162/2019

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. T. இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாரிமுத்து (DW–1 ) | வயது | : | 75 /2026 |
| த/க பெயர் | : | திரு. முருகையன் | தொழில் | : | பில் கலக்டர் (ஓய்வு) |
| முகவரி | | சித்தமல்லி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதியின் கணவர் சிவசுப்ரமணியன் தகப்பனார் பெயர் முருகையன் என்றால் சரிதான். சிவசுப்ரமணியனுக்கும் எனக்கும் அப்பா முருகையன் என்றால் சரிதான். தாவா அ பட்டியல் சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் வசந்தியுடமிருந்து கிரயம் வாங்கினேன். வசந்தி எனக்கு என்ன உறவுமுறை என்றால் சிவசுப்ரமணியனின் அம்மாவின் தங்கை. வசந்தி தற்போது எங்கு உள்ளார் என்றால் பூர்வீகம் சித்தமல்லி தற்போது சென்னையில் உள்ளார். சுரேஷ் என்பவர் வாதியின் மகன் என்றால் சரிதான். அவர் சிறுவயதில் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சுரேஷ்க்கு மணிமேகலை வாரிசுதாரர் என்பதில் எனக்கு எதுவும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.
2) வாதியின் வழக்குரையை படித்து பார்த்து தான் எனது எதிர் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தானது மணிமேகலையின் மகன் சுரேஷ் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து, வாரிசு முறையில் மணிமேகலைக்கு சொந்தமானது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுரேஷ் கிரயம் வாங்கிய சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் உள்ள சொத்துக்கள் விபரம் சரியானது என்றால் தவறாக போடப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் உள்ள சொத்து விபரம் தவறானது என்பதை காண்பிக்க எனது எதிர் வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ என் தரப்பில் வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரைபடம் போட்டுள்ளேன்.

3) என்னிடம் காண்பிக்கப்படும் எதிர் வழக்குரையில் வரைபடம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்து குறித்த வரைபடம் தவறு என்பதை நிரூபிக்கும் வகையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ள வாறு தாவா சொத்து அமைந்திருக்கும் என்ற விபரம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் தான் நான் நீதிமன்ற ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சொத்துக்கு தென்புறம் மணிமேகலை சொத்து உள்ளது என்றால் சரிதான்.
4) எனது சொத்துக்கும் மணிமேகலை சொத்துக்கும் இடையில் மண் ரோடு கிழக்கு மேற்காக உள்ளது என்றால் தார் ரோடு உள்ளது. அந்த தார் ரோட்டில் பழைய மதகு உள்ளது என்றால் இல்லை. அந்த மதகின் வழியாக எனது சொத்திற்கும் வாதி சொத்திற்கும் இடையில் தண்ணீர் பாய்ச்சும் விதத்தில் தெற்கு வடக்காக பாசன வாய்க்கால் உள்ளது என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய சொத்திற்கு வடபுறம் கிழக்கு மேற்கில் கொக்கன் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். கொக்கன் வாய்க்காலில் தெற்கு நோக்கி பாசன தண்ணீர் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு கிழக்கில் ஒரு குட்டை உள்ளது என்றால் சரிதான். அது யாருக்கு சொந்தமானது என்றால் ஊராட்சிக்கு சொந்தமானது.
5) அந்த குட்டைக்கும் தென்புறம் நாராயணசாமியின் வீடு மனை உள்ளது என்றால் வீடு மனை உள்ளது அதன் உரிமையாளர் புனிதன். புனிதன் அப்பா பெயர் நாராயணசாமி என்றால் சரிதான். அந்த குட்டைக்கு வருகின்ற தண்ணீர் கொக்கன் வாய்க்காலில் இருந்து தெற்காக பிரியும் தண்ணீர் வாய்க்கால் வழியாக தான் வரும் என்றால் தவறு. மணிமேகலையின் சொத்துக்கு மேல்புறம் கணபதி வயல் உள்ளது என்றால் தவறு வயல் உள்ளது. மணிமேகலை சொத்திற்கு மேல்புறம் வயல் உள்ளது என்றால் சரிதான். தார் சாலைக்கு தெற்கில் மணிமேகலைக்கு சொந்தமான சொத்தில் கிழக்கிலும் மேற்கிலும் வயல் உள்ளது என்றால் சரிதான்.
6) மணிமேகலை சொத்துக்கு கிழக்கிலும் ராமையன் சொத்திற்கு மேற்கிலும் நடுவில் ஒரு பாசன வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். அந்த பாசன வாய்க்கால் வசந்தி பெயரில் உள்ள பட்டா கன்னி என்றால் சரிதான். அந்த பட்டா கன்னிக்கும் பாசனம் கொக்கன் வாய்க்கால் வழியாகதான் வரும் என்றால் சரிதான், அந்த பட்டா கன்னி எனது வயலுக்கு மட்டும்தான் வடிகால். எனது வயலில் உள்ள வடிகாலுக்கு கிழக்கு மேற்காக உள்ள ரோட்டை தாண்டி தான் தண்ணீர் வடவேண்டும் என்றால் சரிதான். ரோட்டை தாண்டி மதகு வழியாக தான் தண்ணீர் வரவேண்டும் என்றால் நான் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று தண்ணீர் செல்லும் வகையில் பொந்து அமைத்துள்ளேன். அந்த பொந்து தான் மதகு என்றால் சரியல்ல.

7) எனக்கு சொந்தமான நிலத்திற்கு கீழ் புறம் குட்டை உள்ளது என்றால் பஞ்சாயத்திற்கு சொந்தமான குட்டை உள்ளது. எனது சொத்திற்கு தென்புறம் மணிமேகலை வயல் உள்ளது என்றால் இல்லை, குட்டை உள்ளது. அந்த குட்டையானது வயலாக இருந்தது என்றால் தவறு. எனது நிலத்திற்கு வடிகால் எந்த நிலத்தின் வழியாக வருகிறது என்றால் மணிமேகலை வயலின் வழியாகவும் எனது சொந்தமான 10 குழியின் வழியாக வருகிறது.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்களை பரிசீலணை செய்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.06 16:26:52 +0530

District Munsif
Mannargudi.